சாந்தி IAS அகாடமி, சுரண்டை
PH: 90250 70679, 93441 26577, 04633-211679

# TNPSC Test Batch 2022 (பொதுத்தமிழ் & பொதுஅறிவு) R-1

1) கூற்றுகளில் சரியற்றது எது?
1)ஐகாரம் சொல்லின் முதலில் வரும்போது ஒன்றரை மாத்திரை அளவில் ஒலிக்கும்.
2)ஐகாரம் சொல்லின் இடையிலும் இறுதியிலும் வரும்போது ஒரு மாத்திரை அளவில் ஒலிக்கும்.
3)ஔ, வௌ, என ஔகார எழுத்து தனித்து வரும் இடங்களில் தனக்குரிய இரண்டு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கிறது.
4)ஔகாரம் சொல்லின் இடையில் வரும். இறுதியில் வராது
5)மகர குறுக்கத்தின் மாத்திரை அளவு அரை மாத்திரை
1)1,3,4,5 மட்டும் சரி 2)2,3,5 மட்டும் சரி
3)1,2,3 மட்டும் சரி 4)அனைத்தும் சரி

2) கூற்றுகளில் புறநானூறு பாடல் அல்லாதது எது?
1) "கலந்தந்த பொற்பரிசம் கழித்தோணியால் கரைசேர்க்குந்து"
2) "கலை உணக் கிழந்த முழவு மருள் பெரும்பழம்"
3) "தமக்கென முயலா நோன்றாள் பிறர்க்கென முயலுநர் உண்மையானே"
4) "உலகுகிளர்ந் தன்ன உருகெழு வங்கம் புலவுத்திரைப் பெருங்கடல் நீர் இடைப்போழ்"

3) "வெள்ளத்து அணைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத்து அனையது உயர்வு" என்ற திருக்குறள் எந்த அதிகாரத்தில் உள்ளது?
1)ஊக்கமுடைமை 2)அடக்கமுடைமை
3)நடுவுநிலைமை 4)வாய்மை

4) கலைச்சொற்களில் பொருத்தமான இணை எது/எவை
1)அணிகலன் - Ornament & உவமை - Parable
2)கண்ணியம் - Discipline & கொள்கை - Doctre
3)ஒப்புரவுநெறி – Reciprocity & பேச்சாற்றல் - Elocution
4)நீர்ப்பாசனம் - Cultivation & நெற்பயிர் - paddy
1)1 மட்டும் 2)3,4 மட்டும் 3)1,3 மட்டும் 4)1,2,4 மட்டும்

5) பொருத்துக :
அ)மண்ணழகு – 1)மெய்முதல் புணர்ச்சி
ஆ)பொற்சிலை – 2)உயிர்முதல் புணர்ச்சி
இ)சிலையழகு – 3)உயிரீற்றுப் புணர்ச்சி
ஈ)பொன்னுண்டு – 4)மெய்யீற்றுப் புணர்ச்சி
1)4,1,3,2 2)1,2,3,4 3)4,3,2,1 4)3,4,1,2

6) கூ என்ற ஓரெழுத்து ஒருமொழியின் பொருள்
1)அழைத்தல் 2)ஒழுக்கம் 3)பூமி 4)மேகம்

7) கடல்நீர் ஆவியாகி மேகமாகும். பின்னர் மேகம் குளிர்ந்து மழையாக பொழியும் என்ற அறிவியல் செய்தியை குறிப்பிடாத பழந்தமிழ் இலக்கியம் எது?
1)திருக்குறள் 2)திருப்பாவை
3)பரிபாடல் 4)பதிற்றுப்பத்து

8) பொருந்தாத இணை எது?
1)கல்லில் நார் உரித்தல் - ஆராய்ந்து பாராமல்
2)அவசரக்குடுக்கை – எண்ணிச் செயல்படாமை
3)கம்பிநீட்டுதல் - விரைந்து வெளியேறுதல்
4)கண்ணை மூடிக்கொண்டு - இயலாத செயல்
1)1,4மட்டும் 2)2மட்டும் 3)3மட்டும் 4)ஏதுமில்லை

9) கூற்றுகளை ஆராய்க:
1)பயனிலை ஏற்றல் என்ற பொருளில் வரும் வேற்றுமை முதல் வேற்றுமை ஆகும்.
2)இல் என்னும் வேற்றுமை உருபு நீங்கல் பொருளில் வந்தால் ஐந்தாம் வேற்றுமை என்று கொள்ளவேண்டும்
3)உரிமைப்பொருளில் வரும் வேற்றுமை ஆறாம் வேற்றுமை ஆகும்
4)இரண்டாம் வேற்றுமையை செயப்படுபொருள் வேற்றுமை என்று கூறுவர்
1)2மட்டும் தவறு 2)1மட்டும் தவறு
3)3மட்டும் தவறு 4)தவறு ஏதுமில்லை

10) கடியலூர் உருத்திரங்கண்ணனார் பத்துப்பாட்டில் எந்த இரு நூல்களை இயற்றினார்.
1)திருமுருகாற்றுப்படை, நெடுநெல்வாடை
2)பெரும்பாணாற்றுபடை, பட்டினப்பாலை
3)பெருநராற்றுப்படை, முல்லைப்பாட்டு
4)சிறுபாணாற்றுப்படை, நெடுநெல்வாடை

11) கூற்றுகளை ஆராய்க.
1)மேல்வாய்ப்பல்லின் அடியை நாக்கின் நுனி பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் - ந்,ன்
2)மேல் வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் - த்,ந்
3)மேல்வாயை நாக்கின் ஓரங்கள் தடித்து தடவுதல் பிறக்கும் எழுத்து-ல்
4)நாக்கின் அடிப்பகுதி, மேல்வாய்ப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் - ப்,ம்
1)2 மட்டும் தவறு 2)3 மட்டும் தவறு
3)4 மட்டும் தவறு 4)அனைத்தும் தவறு

12) ஏ,ஓ என்னும் எழுத்துக்களை உருவாக்கியவர்
1)வீரமாமுனிவர் 2)பெரியார்
3)மு.வரதராசனார் 4)கால்டுவெல்

13) பொருந்திய இணை எது/எவை:
1)சிறிய கடிதம் - தெரிநிலை பெயரெச்சம்
2)மெல்ல வந்தான் - தெரிநிலை வினையெச்சம்
3)எழுதி வந்தான் - குறிப்பு வினையெச்சம்
4)எழுதிய கடிதம் - குறிப்பு பெயரெச்சம்
1)2,3 மட்டும் 2)1,4 மட்டும்
3)1,3 மட்டும் 4)ஏதுமில்லை

14) பஞ்சாப் மாநிலத்தின் அறுவடைத் திருநாள் எது?
1)உத்தராயன் 2)மகரசங்கராந்தி
3)லோரி 4)ஜீன்னம்

15) கூற்றுகளை ஆராய்க.
1)பொன்னோடுவந்து கறியொடு பெயரும் - அகநானூறு:149
2)பாலொடு வந்து கூழொடு பெயரும் - குறுந்தொகை
3)'தந்நாடு விளைந்த வெண்ணெல் தந்து பிறநாட்டு உப்பின் கொள்ளைச் சுற்றி உமணர்போகலும்' – புறநானூறு:183
4)'நடுவு நின்ற நன்னெஞ்சினோர் - பட்டினப்பாலை.
1)2 மட்டும் தவறு 2)3 மட்டும் தவறு
3)1,2,3 மட்டும் சரி 4)அனைத்தும் சரி

16) கூற்றுகளை ஆராய்க.
1)ஆகாயத்துக்கு அடுத்தவீடு என்னும் புதுக்கவிதை நூலுக்கு சாகித்திய அகாதெமி விருது பெற்றவர் மு.மேத்தா.
2)செய்யுளுக்கே உரிய எதுகை, மோனை என்பனவற்றை

SHANTHI IAS ACADEMY

உரைநடைக்குள் கொண்டு வந்தவர் பாரதியார்.
3)எண்ணப்படுவது, நினைக்கப்படுவது, கனவு காணப்படுவது, மொழியே ஆகும் என்று கூறியவர் மு.வரதராசனார்
4)பிசிராந்தையார் என்னும் நாடக நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது பெற்றவர் பாரதிதாசன் ஆவார்.
1)அனைத்தும் சரி 2)1,2,4 மட்டும் சரி
3)1,3,4 மட்டும் சரி 4)அனைத்தும் சரி

17) பொருத்துக.

| இதழ்கள் | | நடத்தியவர்கள் |
|---|---|---|
| அ)ஊர்வலம் | - | 1)இராஜ மார்த்தாண்டன் |
| ஆ)கனவு | - | 2)மீ.ராசேந்திரன் |
| இ)கொல்லிப்பாவை | - | 3)இராசகோபாலன் |
| ஈ)அன்னம் விடு தூது | - | 4)சுப்ரபாரதிமணியன் |

1)1,2,3,4 2)3,4,1,2 3)3,2,4,1 4)2,3,1,4

18) "இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணல் எம்கோமான் வைற்றுதி வேலே" என்ற பாடலடிக்கு உரியவர்
1)காவாற்பெண்டு 2)வெண்ணிகுயத்தியார்
3)ஆண்டாள் 4)ஔவையார்

19) கூற்றுகளை ஆராய்க.
1)இந்தியாவில் உள்ள தொன்மையான நூலகங்களில் தஞ்சை சரசுவதி மகால் நூலகமும் ஒன்று. இது கி.பி.1212 முதல் இயங்கிவருவதாக கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன.
2)1942-ல் தொடங்கப்பட்ட உ.வே.சா. நூலகத்தில் 2941 தமிழ்நூல்கள் உள்ளன.
3)தமிழ்நாட்டின் மையநூலகம் 1896-ல் தொடங்கப்பட்டது.
4)தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம் 1981-ல் தோற்றுவிக்கப்பட்டது.
1)2,3,4 மட்டும் சரி 2)1,3,4 மட்டும் சரி
3)1,2,4 மட்டும் சரி 4)1,2,3 மட்டும் சரி

20) பொருத்தமற்ற இணை எது/எவை.
1)ஆசாரக்கோவை - 100 வெண்பாக்கள்
2)அறநெறிச்சாரம் - 255 பாடல்கள்
3)நீதிநெறி விளக்கம் - 102 வெண்பாக்கள்
4)நாலடியார் - 400 வெண்பாக்கள்
1)3 மட்டும் 2)2 மட்டும்
3)1 மட்டும் 3)ஏதுமில்லை

21) பொருத்துக.
1)காரணப்பொதுப்பெயர் - 1)அணி
2)இடுகுறிச்சிறப்புப்பெயர் - 2)கருவேலங்காடு
3)இடுகுறிப்பொதுப்பெயர் - 3)மரம்
4)காரணச்சிறப்புபெயர் - 4)வளையல்
1)4,3,2,1 2)3,4,1,2 3)1,2,3,4 4)1,3,2,4

22) தமிழ்நாட்டின் ஹாலந்து என்று சிறப்பிக்கப்படுவது.
1)திருப்பூர் 2)ஏற்காடு 3)கோவை 4)திண்டுக்கல்

23) கூற்றுகளை ஆராய்க:
1)இகரத்தில் முடியும் வினையெச்சங்களை அடுத்து வல்லினம் மிகும்.
2)உவமைத்தொகை, உம்மைத்தொகை, உருவகத்தில் வல்லினம் மிகும்.
3)வினைத்தொகையில் வல்லினம் மிகாது
4)இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்து வரும் இடங்களில் வல்லினம் மிகாது
1)1,2,4 மட்டும் சரி 2)2,3,4 மட்டும் சரி
3)1,3,4 மட்டும் சரி 4)அனைத்தும் சரி

24) நம்மாழ்வாரின் அவதார ஸ்தலம்
1)திருவெ.ஃகா 2)காஞ்சிபுரம் மற்றும் திருவைகுண்டம்
3)திருவாரூர் 4)திருக்குருகூர்

25) கூற்றுகளை ஆராய்க.
1)"புனையா ஓவியம் புறம்போந்தன்ன" – மணிமேகலை
2)"கொற்கையில் பெருந்துறை முத்து" – அகநானூறு
3)"கலஞ்செய் கம்மியர் உருகெனக் கூஇய்" – மணிமேகலை
4)"முத்துப்படு பரப்பிற் கொற்கை முன்றுறை – நற்றிணை
1)அனைத்தும் சரி 2)2 மட்டும் சரி
3)1,3 மட்டும் சரி 4)2,4 மட்டும் சரி

26) அம்பேத்கர் கூற்றுகளை ஆராய்க.
1)1923 ஆம் ஆண்டு ரூபாய் பற்றிய பிரச்சனை என்னும் ஆராய்ச்சி கட்டுரைக்காக முனைவர்பட்டம் பெற்றார்.
2)"இந்தியாவின் தேசியப்பங்கு வீதம்" என்ற ஆய்வுக்காக கொலம்பியா பல்கலைக் கழகம் அவருக்கு முனைவர் பட்டம் வழங்கியது.
3)ஒடுக்கப்பட்ட பாரதம் என்னும் இதழை 1927 ஆம் ஆண்டு துவங்கினார்
4)அவர் எழுதிய புத்தரும் அவரின் தம்மமும் புத்தகம் 1956-ல் வெளியானது.
1)1,3,4 மட்டும் சரி 2)1,2,4 மட்டும் சரி
3)1,2,3 மட்டும் சரி 4)2,3,4 மட்டும் சரி

27) சொற்களை அவை இடம் பெற்ற நூல்களோடு பொருத்துக.
அ)பருத்தி - 1)குறுந்தொகை
ஆ)செய் - 2)நற்றிணை
இ)உழவர் - 3)அகநானூறு
ஈ)வெள்ளம் - 4)பதிற்றுபத்து
1)3,2,1,4 2)3,1,2,4 3)2,3,4,1 4)3,4,1,2

28) கீழ்க்கண்ட எது பிறமொழிச் சொல்
1)டென்மார்க் 2)லண்டன் 3)டமாரம்
4)கார்த்திக் 5)திலீப் 6)ரம்பம்
1)1,2 மட்டும் 2)4,5 மட்டும் 3)3,6 மட்டும் 4)அனைத்தும்

29) ஏவல் வினைமுற்று பற்றிய கூற்றுகளில் தவறானது?
1)விகுதி பெற்றும் பெறாமலும் வரும்
2)கட்டளைப் பொருளை மட்டும் உணர்த்தும்
3)ஒருமை பன்மை வேறுபாடு இல்லை
4)முன்னிலையில் வரும்.

30) பொருந்தாத இணை எது/எவை.
1)வலியில் நிலைமையான் வல்லுருவ பெற்றம் புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று - இல்பொருள் உவமையணி
2)வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள் யானையால் யானையாத் தற்று – உவமையணி
3)கடல் ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும் நாவாயும் ஓடா நிலத்து – பிறிதுமொழிதல்அணி
4)தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு – உவமைஅணி

1)1,2,3 மட்டும் சரி 2)2,3,4 மட்டும் சரி
3)1,2,4 மட்டம் சரி 4)அனைத்தும் சரி

31) தலைவர்களை உருவாக்குபவர் என்ற சிறப்பு பெயர் பெற்றவர்க்கு கன்னியாகுமரியில் மணிமண்டபம் அமைக்கப்பட்ட ஆண்டு.
1)2000 2)2001 3)2002 4)2003

32) இந்திர விழா என்பது அக்காலத்தில் என்ன விழாவாக கொண்டாடப்பட்டது?
1)பொங்கல்திருநாள் 2)மாட்டுப்பொங்கல்
3)காணும்பொங்கல் 4)போகிப்பண்டிகை

33) கூற்றுகளை ஆராய்க.
1)தமிழ் மக்களிடம் முப்பத்தாறு வகையான முரசுகள் வழக்கத்தில் இருந்ததாக மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது.
2)மண்ணமை முழவு பெரும்பாணாற்றுப்படையில் இடம் பெற்றுள்ளது.
3)மகரயாழ் பதினான்கு நடம்புகளை கொண்டது.
4)மத்து + தளம் = மத்தளம் என்று ஆகியது என்கிறார் சிலப்பதிகார உரையாசிரியர் நச்சினார்கினியார்.
1)3 மட்டும் தவறு 2)4 மட்டும் தவறு
3)1 மட்டும் தவறு 4)அனைத்தும் தவறு

34) கூற்றுகளை ஆராய்க.
1)சேய்மைச் சுட்டு எழுத்து ‘அ’ ஆகும். இது அருகில் உள்ளவற்றை சுட்டுகின்றன.
2)இடைச்சொல் தனித்து இயங்காது
3)இரட்டைக்கிளவி வினைக்கு அடைமொழியாகக் குறிப்பு பொருளில் வரும்
4)மொழி முதலிலும் இறுதியிலும் வரும் வினா எழுத்து ‘ஏ’ ஆகும்.
1)2,3,4 மட்டும் சரி 2)1,2,4 மட்டும் சரி
3)1,3,4 மட்டும் சரி 4)1,2,3 மட்டும் சரி

35) கூற்றுகளை ஆராய்க:
1)முத்துராமலிங்கரின் வீரமிக்க பேச்சு விடுதலைப் போருக்கு மிகவும் உதவும் என்று கூறியவர் காமராசர்
2)முத்துராமலிங்கரின் பேச்சு உள்ளத்திலிருந்து வெளிவருகிறது உதடுகளிலிருந்து அல்ல. உள்ளத்தால் எதிலும் பற்றற்று உண்மையில் பட்டதை மறைக்காமல் அப்படியே பேசிவிடு அவரது வழக்கம் என்று இராஜாஜி பாராட்டினார்.
3)1934-ல் குற்றப்பரம்பரை எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது 1938-ல் குற்றப்பரம்பரைச் சட்டம் நீக்கப்பட்டது.
4)1946-ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் போட்டியில் வெற்றிபெற்றார் முத்துராமலிங்கர்
1)அனைத்தும் சரி 2)2 மட்டும் தவறு
3)4 மட்டும் தவறு 4)3 மட்டும் தவறு

36) கீழ்க்கண்ட சொற்களில் எது இலக்கணப்போலி அல்ல?
1)கால்வாய் 2)புறநகர் 3)வாயில் 4)சதை

37) “தண் பொருநை புனல் நாடு” என்று திருநெல்வேலியின் சிறப்பைக் கூறியவர்?
1)திருஞானசம்பந்தர் 2)குமரகுருபரர்
3)அழகிய சொக்கநாதர் 4)சேக்கிழார்

38) பொருளின் பெயர் அதன் சினையாகிய உறுப்புக்கு ஆகிவருவது
1)சினையாகுபெயர் 2)முதலாகுபெயர்
3)இடவாகுபெயர் 4)காலவாகுபெயர்

39) பொருத்தமில்லாத இணை எது?
1)உவமை கவிஞர் - இராசகோபாலன்
2)காந்திய கவிஞர் - வெ.இராமலிங்கனார்
3)கவிஞாயிறு – தாராபாரதி
4)பாவலர்மணி – அரங்கசாமி
5)பாவலரேறு – துரை.மாணிக்கம்
6)மக்கள்கவிஞர் - கண்ணதாசன்
1)ஏதுமில்லை 2)4 மட்டும் 3)2 மட்டும் 4)6 மட்டும்

40) பொருந்திய இணைகள் எது/எவை?
1)பிரயாணம் - பாவண்ணன்
என் இனிய எந்திரா – புதுமைபித்தன்
2)இதய ஒலி – நாமக்கல் கவிஞர்
கண்ணீர் பூக்கள் - சுப்ரபாரதிமணியன்
3)ஒருநாள் கழிந்தது – எஸ்.ராமகிருஷ்ணன்
தொடுவானம் - சுரதா
4)வெள்ளை ரோஜா – தேனரசன்
தமிழ்ச்சோலை – திரு.வி.க
1)3 மட்டும் 2)4 மட்டும் 3)2 மட்டும் 4)ஏதுமில்லை

41) கொவ்வைத் தமிழை கொண்டு பாடிய சங்கால பெண்பாற் புலவரின் பெயர்?
1)வெண்ணிக்குயத்தியார் 2)வெள்ளி வீதியார்
3)ஒக்கூர் மாசாத்தியார் 4)ஆதிமந்தியார்

42) சரியானது எது?
1)இது பழம் அல்ல
2)இந்த மரம் எத்துணை ஆண்டு பழமையானது
3)இவை பழங்கள் அன்று 4)எத்தனை பெரிய மரம்

43) அடுக்கிய ……….. பெறினும் குடிப்பிறந்தார் குன்றுவ செய்தல் இலர் - கோடிட்ட இடத்தில் வரும் சொல்லைத் தேர்க.
1)பத்தின் 2)நூறின் 3)ஆயிரம் 4)கோடி

44) சீவகசிந்தாமணியின் முதல் ஐந்து இலம்பகங்களை சரியான வரிசைப்படுத்துக?
1)நாமகள், கோவிந்தையார், காந்தருவதத்தையார், குணமாலையார், பதுமையார்,
2)நாமகள், காந்தருவத்தையார், கோவிந்தையார், பதுமையார், குணமாலையார்
3)நாமகள், பதுமையார், காந்தருவத்யார், கோவிந்தையார், குணமாலையார்
4)நாமகள், கோவிந்தையார், பதுமையார், காந்தருவத்தையார், குணமாலையார்.

45) பெரியார் “தெற்காசியாவின் சாக்ரடீஸ்” பட்டம் பெற்ற நாள்.
1)27.04.1970 2)27.05.1970
3)27.06.1970 4)27.07.1970

46) சரியற்றது எது?
1)காய் முன் நிரை – கலித்தளை
2)விள முன் நிரை - இயற்சீர் வெண்டளை
3)காய் முன் நேர் - வெண்சீர் வெண்டளை
4)மாமுன்நேர் - நேரொன்றாசீரியத்தளை

47) கீழ்க்கண்டகுறளில் சரியான வரிசை.
1)அணிநிழற் மயலயம் மண்ணும் மணிநீரும்

SHANTHI IAS ACADEMY

அரண் உடையது காடு.
2)மண்ணும் மலையும் மணிநீரும் அணிநிழற் காடும் உடையது அரண்
3)மணிநீரும் மலையும் மண்ணும் காடும் அணிநிழற் உடையது அரண்
4)மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற் காடும் உடையது அரண்

48) கீழ்க்கண்ட எந்த பெயரில் கண்ணுடையம்மன் பள்ளு ஏறுதழுவுதல் நிகழ்வை பதிவு செய்துள்ளது.
1)சல்லிகட்டு 2)மஞ்சு விரட்டு
3)காளை விரட்டு 4)எருது கட்டி

49) "பன்ன அரும் கலைதெரி பட்டிமண்டபம்" என்று கூறும் நூல்
1)கம்பராமாயணம் 2)மணிமேகலை
3)திருவாசகம் 4)சிலப்பதிகாரம்

50) கங்கை கொண்ட சோழபுரம் கோவிலை எழுப்பியவர்?
1)முதலாம் இராசராசன் 2)முதலாம் இராசேந்திரன்
3)இரணடாம் இராசராசன் 4)மூன்றாம் குலோத்துங்கன்

51) "விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண மென்மேலும் முகமலரும் மேலோர் போல" பாடலடி இடம் பெற்ற நூல்.
1)புறநானூறு 2)நற்றிணை 3)சிலப்பதிகாரம்
4)கலிங்கத்துபரணி

52) கூற்றுகளை ஆராய்க.
1)குமரகுருபரரின் காலம் 17-ஆம் நூற்றாண்டு
2)"செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாட" என்ற பாடல் முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் நூலின் செங்கீரைப் பருவத்தில் பத்தாவது படல்.
3)பிள்ளைத்தமிழ் நூறு பாடல்களால் பாடப்பெறும்
4)பிள்ளைத் தமிழ் 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று
1)1,3,4 மட்டும் சரி 2)1,2,4 மட்டும் சரி
3)2,3,4 மட்டும் சரி 4)1,2,3 மட்டும் சரி

53) மண்ணாசை காரணமாக பகைவர் நாட்டைக் கைப்பற்ற கருதி எந்தப் பூவைச் சூடுவர்.
1)வாகைப் பூ 2)காஞ்சிப் பூ 3)வஞ்சிப் பூ 4)தும்பைப் பூ

54) நீ வந்தேன் என்பது
1)திணை வழு 2)பால் வழு 3)இடவழு 4)கால வழு

55) பருஉக் என்பதன் இலக்கணகுறிப்பு
1)இசைநிறையளபெடை 2)சொல்லிசை அளபெடை
3)இன்னிசை அளபெடை 4)ஒற்றளபெடை

56) 'அவர் பேசாத நாள் உண்டா? குரல் கேட்காத ஊர் உண்டா? இவரிடம் சிக்கித் திணறாத பழமை உண்டா? யார் யாரைப்பற்றி கூறியது
1)பெரியாரைப் பற்றி மு.வ
2)பெரியாரைப் பற்றி ஜீவானந்தம்
3)பெரியாரைப் பற்றி திரு.வி.க
4)பெரியாரைப் பற்றி அண்ணா

57) 'இவை மூன்றன் நாமம் கெடக்கெடும் நோய்' எவை? என்று வள்ளுவர் கூறுகிறார்.
1)ஆசை, செல்வம், பொறாமை
2)செல்வம், பொறாமை, புறங்கூறல்
3)ஆசை, சினம், அறியாமை
4)சினம், செல்வம், களவு

58) சூசையப்பரை பாட்டுடைத் தலைவராக கொண்டு பாடப்பட்ட நூல்?
1)இயேசு காவியம் 2)இரட்சணிய யாத்திரிகம்
3)தேம்பாவணி 4)இரட்சணிய மனோகரம்

59) "சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர் புன்கள் அஞ்சும் பண்பின் மெண்கண் செல்வம் செல்வம் என்பதுவே பாடலின் ஆசிரியர்
1)மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்
2)நல்லந்துவனார் 3)ஏணிச்சேரி முடமோசியார்
4)நல்வேட்டனார்

60) இராசசோழன் தெரு – எந்த நாட்டில் உள்ளது?
1)மலேசியா 2)அமெரிக்கா
3)கனடா 4)இங்கிலாந்து

61) கூத்தராற்றுப்படை பாட்டுடைத் தலைவன்
1)அதியன் 2)நள்ளி 3)நன்னன் 4)குமணன்

62) பிறமொழிக் கலப்பு இன்றி இனிய எளிய தமிழ்சொற்களை கொண்டே பேசவும் எழுதவும் இயலும் என்று நடைமுறைப் படுத்தியவர்
1)வ.சு.ப.மாணிக்கம் 2)பரிதிமாற்கலைஞர்
3)மு.வரதராசனார் 4)மறைமலையடிகள்

63) 'நும்மனைச் சிலம்பு கழீகி அயரினும் எம்மனை வதுவை நல்மணம் கழிக' என்று கூறும் நூல்?
1)கலித்தொகை 2)அகநானூறு
3)ஐங்குறுநூறு 4)புறநானூறு

64) 'சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும் என்ற திருக்குறளில் பயின்று வந்துள்ள அணி
1)உவமை அணி 2)பிறிதுமொழிதலணி
3)எடுத்துக்காட்டு உவமையணி 4)ஏகதேச உருவகஅணி

65) சரியற்ற பகுபத உறுப்பிலக்கண பிரித்தறிதல்
1)கண்டான் = காண்(கண்) + ட் + ட் + ஆன்
2)அமர்ந்தான் = அமர் + த்(ந்) + த் + ஆன்
3)செய்த = செய் + த் + அ
4)தந்தனன் = தா(த) + த்(ந்) + த் + அன் + அன்

66) திரு.வி.க யாரிடம் தமிழ் படித்தார்?
1)நா.கதிரைவேலர் 2)சபாபதியார்
3)மயிலை தணிகாசலம் 4)உ.வே.சா

67) பொருத்துக.
அ)7நரம்புகள் - 1)சகோடயாழ்
ஆ)16நரம்புகள் - 2)மகரயாழ்
இ)21நரம்புகள் - 3)பேரியாழ்
ஈ)17நரம்புகள் - 4)செங்கோட்டியாழ்
1)1,2,3,4 2)4,1,3,2 3)2,1,3,4 4)3,1,4,2

68) "சருக்கம்" என்ற காப்பிய சிற்றுறுப்பு அமைந்த நூல்.
1)கந்தபுராணம் 2)மணிமேகலை
3)சூளாமணி 4)கம்பராமாயணம்

69) கூற்றுகளை ஆராய்க.
1)இரட்சணிய யாத்திரிகம் 3765 பாடல்களைக் கொண்ட பெரும் உருவகக் காப்பியம்.
2)ஜான் பன்யன் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய இரகசிய வழி (The Secret Way) என்ற ஆங்கில நூலின் தழுவலாக இரட்சணிய யாத்திரிகம் படைக்கப்பட்டது.

3)இரட்சணிய யாத்திரிகத்தின்ஆசிரியர் எச்.ஏ.கிருட்டிணனார்
4)இரட்சணிய யாததிரிகம் 1894-ஆம் ஆண்டு மே திங்களில் முதல் பதிப்பாக வெளியிடப்பட்டது.
1)1,3,4 மட்டும் சரி 2)2,3,4 மட்டும் சரி
3)1,2 தவறு, 3,4 சரி 4)1,2,3 மட்டும் சரி

70) கீழ்க்கண்ட எந்த நூலை மா.இராசமாணிக்கனார் இயற்றவில்லை.
1)பெரியபுராண ஆராய்ச்சி 2)பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை
3)பத்துப்பாட்டு ஆராய்ச்சி 4)தமிழ்நாட்டு வட எல்லை.

71) பொருத்தமற்ற பொருள் எது?
1)ஆமந்திரிகை - இன்னிசைவாத்தியம்
2)கதழ்-விரைவு 3)நவை–குற்றம் 4)கடுந்துப்பு-மிகுவலிமை

72) இந்தியாவின் முதல் பொது நூலகம்
1)திருவனந்தபுரம் நடுவண் நூலகம் 2)உ.வே.சா நூலகம்
3)கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் 4)கன்னிமாரா நூலகம்

73) பொருத்தமற்ற கூற்று எது?(தவறான கூற்று)
1)பவனந்தி முனிவர் 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்
2)தண்டி 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்
3)பரஞ்சோதி முனிவர் 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்
4)திருத்தக்கத் தேவர் 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.

74) நேரசைக்குப் பொருந்தாதது எது?
1)குறில் ஒற்றுடன் வருதல் 2)நெடில் ஒற்றுடன் வருதல்
3)குறில்நெடில் இணைந்துவருதல் 4)குறில்தனித்து வருதல்

75) மொழி இறுதி எழுத்துக்களில் இடம் பெற்றுள்ள மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை
1)10 2)11 3)12 4)13

76) உரையாசிரியர்கள் பலராலும் அதிகமாக மேற்கோள் காட்டப்பட்ட நூல்
1)திருக்குறள் 2)அகநானூறு
3)குறுந்தொகை 4)பதிற்றுப்பத்து

77) கூற்றுகளை ஆராய்க.
1)கற்றளி வடிவத்தை உருவாக்கிய மன்னன் இரண்டாம் நரசிம்மவர்மன்
2)தஞ்சை கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக்கலை பாணியாகும்
3)திருவாயில் மரபை தோற்றுவித்த மன்னன் இரண்டாம் குலோத்துங்கன்
4)புகழ்பெற்ற கோவில்கள் பலவற்றிலும் மிக உயர்ந்த கோபுரத்தை எழுப்பியது விஜய நகர அரசு
1)1,2,4 மட்டும் சரி 2)2,3,4 மட்டும் சரி
3)1,3,4 மட்டும் சரி 4)1,2,3 மட்டும் சரி

78) பொருத்துக.
அ)கம்பர் - 1)டி.கே.சி
ஆ)கம்பர் யார்? - 2)வ.சு.ப.மாணிக்கம்
இ)சூளாமணிவசனம் - 3)மயூரம் வேதநாயகம்
ஈ)சுகுனா சுந்தரி - 4)சி.வை.தாமோதரனார்
உ)தமிழும் தமிழரும் - 5)சோமசுந்தரம் பாரதியார்
ஊ)கருனாமிர்த சாகரம் - 6)ஆபிரகாம் பண்டிதர்
1)1,2,4,3,5,6 2)1,2,3,4,5,6 3)2,1,4,3,5,6 4)2,1,3,4,6,5

79) பொருத்துக.
அ)அடிஅகரம் ஐ ஆதல் - 1)பைங்கூழ்
ஆ)ஆதிநீடல் - 2)மூதூர்
இ)இனமிகல் - 3)பெருங்கொடை
ஈ)முன்நின்ற மெய்திரிதல் - 4)செங்கதிர்
1)1,2,3,4 2)1,2,4,3 3)3,2,4,1 4)1,3,4,2

80) கல்வி கற்பிக்கப்படும் இடத்தை கல்லூரி என்று கூறும் நூல்
1)பெரிய திருமொழி 2)திவாகர நிகண்டு
3)பெரிய புராணம் 4)இவற்றில் ஏதுமில்லை

81) இளையராஜா புல்லாங்குழல் இசைக்கலைஞர் ஹரிபிரசாத் சௌராஸிஷ்டன் இணைந்து வெளியிட்ட இசைத்தொகுப்பு
1)இந்தியா 24 மணிநேரம் 2)எப்படிப் பெயரிடுவேன்?
2)காற்றைத் தவிர ஏதுமில்லை 4)ரமண மாலை

82) வேர்ச்சொல்லை வினையெச்சமாக மாற்று? ‘பாடு’
1)பாடினாள் 2)பாடி 3)பாடிய 4)பாடப்பட்ட

83) கரிசல் இலக்கியம் என்பதற்கு சரியான தொடர்?
1)பிரகாசம் தரும் 2)தயக்கம் கொடுக்கும்
3)மண் சாரல் வரும் 4)காய்ந்தும், பெய்தும் கெடுக்கும்

84) உலக பொம்மலாட்ட தினம்
1)நவம்பர் 12 2)பிப்ரவரி 13 3)மார்ச் 21 4)ஜுலை 14

85) சரியற்ற கலைச்சொல் எது?
1)Window – சாளரம் 2)Alignment - இசைவு
3)Icon – ஒளிப்படம் 4)Sign in – புகு பதிகை

86) சலனப்படம் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு
1)1895 2)1896 3)1897 4)1898

87) கமலாம்பாள் சரித்திரம்-புதினத்தின் ஆசிரியர்
1)மயூரம் வேதநாயகம் 2)வடுவூர் துரைசாமி
3)ராஜம் அய்யர் 4)அ.மாதவையா

88) பெரியபுராணம் அமைந்துள்ள திருமுறை
1)9 2)10 3)11 4)12

89) “நாளுங் கிழமையும் நலிந்தோர்க்கில்லை” என்று கூறும் நூல்
1)பழமொழிநானூறு 2)நெடுந்தொகை
3)நறுந்தொகை 4)நல்வழி

90) வல்லினம் மிகும் இடக் கூற்றுக்கு பொருந்தாத தவறான கூற்று எது.
1)ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும்.
2)உவமைத் தொகையில் வல்லினம் மிகும்.
3)இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும்.
4)ஓரெழுத்து ஒருமொழிக்குப் பின் வல்லினம் மிகும்

91) ‘whats app’-என்ற சொல், பார்க்கவும், கேட்கவும் படிக்கவுமான மின்னஞ்சல் குறுஞ்செதி வசதியை முனைவர் ம.இராசேந்திரன் - என மொழி பெயர்த்துள்ளனர்?
1)தூதுலாவி 2)கட்செவி அஞ்சல்
3)எண்ண நகலி 4)தூது செயலி

92) “நாரதர் வருகிறார்” என்ற தொடர் என்ன ஆகுபெயர்?
1)காரியவாகுபெயர் 2)கருத்தாவாகுபெயர்
3)கருவியாகுபெயர் 4)உவமையாகுபெயர்

93) பொருத்துக
1)இருகுறிப் பொதுப்பெயர் - மரங்கொத்தி
2)இருகுறிச் சிறப்புப் பெயர் - பறவை
3)காரணப் பொதுப்பெயர் - காடு
4)காரணச் சிறப்புப்பெயர் - பனை
1)3,4,2,1 2)2,1,3,4 3)1,3,2,4 4)4,2,3,1

SHANTHI IAS ACADEMY

94) 'து' என்னும் சொல்லின் பொருள் பின்வருவனவற்றுள் எது?
1)ஆறு 2)துப்பு 3)உண் 4)துன்பம்

95) கீழ்க்காணும் கருத்துக்களில் தவறானது எது?
1)மிளகு நீரைச் (சாற்றமுது) சாத்தமுது என்பது வைணவ மரபு
2)ஆசிரியரை 'ஐயா' என்றே அழைப்பது வேலூர் ஆம்பூர் வட்டத்தூர் மரபு
3)திருமணம் முதலிய மங்கல நிகழ்ச்சிகளுக்குக் கீற்றுமேய்வதனைக் கொட்டகை என்பது செட்டிநாடு மரபு
4)அமிழ்தத்தைக் கருப்பஞ்சாறு என்பது சிரங்கம் கோவில்மரபு

96) மாணிக்கவாசகர் கட்டிய கோவில் எங்குள்ளது?
1)புதுக்கொட்டை 2)திருப்பெருந்துறை
3)பெரியகுளம் 4)திருவெண்ணெய்நல்லூர்

97) கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?
1)நான், யான் என்பவை தன்மை ஒருமைப் பெயர்கள்
2)நாம், யாம் என்பவை தன்மை பன்மைப் பெயர்கள்
3)வேற்றுமை உருபேற்கும் போது 'யான்' என்பது 'என்' என்றும், 'யாம்' என்பது 'எம்' என்றும், 'நாம்' என்பது நம் என்றும் திரியும்
4)நீ, நீர், நீவிர், நீயிர், நீங்கள் என்பன முன்னிலை ஒருமைப்பெயர் ஆகும்.
1)1,3,4 சரியானவை 2)1,2,3 சரியானவை
3)2,4,1 சரியானவை 4)4,3,1 சரியானவை

98) பொருத்துக : பதிற்றுப்பத்து
1)மூன்றாம் பத்து – பெருங்குன்றூர்கிழார்
2)ஆறாம் பத்து – அரிசல்கிழார்
3)எட்டாம் பத்து – காக்கைப் பாடினியார்
4)ஒன்பதாம் பத்து – பாலைக் கௌதமனார்
1)4,3,2,1 2)2,3,1,4 3)1,3,4,2 4)2,3,4,1

99) பொருந்தாத இணையினைக் காண்க.
1)பாட்டாளி மக்களது பசி தீர வேண்டும் - நாமக்கல் கவிஞர்
2)முல்லைக் கோர் காடு போலும் - சுரதா
3)கல்லைப் பிசைந்து கனியாக்கும் செந்தமிழ் - கவிமணி
4)எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் - பாரதியார்

100)பெருங்கை யானை இனநிரை பெயரும் சுருங்கை வீதி மருங்கில் போரி – பாடலடியின் அடிக்கோடிட்டசொல்லின் பொருள்?
1)கோட்டைவாயில் 2)அந்தப்புரம்
3)சுரங்கப்பாதை 4)வேணிற்பள்ளி

101)உலகின் மிகச்சிறிய செயற்கைக்கோள் எப்போது விண்ணில் செலுத்தப்பட்டது?
1)ஜுன் 22-2017 2)ஆகஸ்ட் 02-2018
3)ஜுலை 18-2004 4)செப்டம்பர் 28-2008

102)கூற்று: மணலில் நடப்பது மனிதர்களுக்கு எளிமையான செயலாகும். ஆதிகமாக அழுத்தம் இருப்பதால் எளிமையாக உள்ளது.
கூற்று:2 அகன்ற பாதங்களை உடைய ஒட்டகங்கள் மணலில் அதிகப்படியான தொடர்பு கொள்வதால் நடக்க கடினமாக உள்ளது.
1)கூற்று 1,2 சரி 2)கூற்று 1சரி 2தவறு
3)கூற்று 1தவறு 2சரி 4)கூற்று 1,2 தவறு

103)தூய மழைநீரில் Ph மதிப்பு?
1)4.6 2)5.6 3)3.3 4)6

104)$Co_2$-ஐ……….குளிர்விக்கும்போது திரவநிலையை அடையாமல் நேரடியாக திடநிலைக்கு மாறுகிறது.
1)-57$^{O}$C 2)98$^{O}$C 3)47$^{O}$C 4)0$^{O}$ C
பொருத்துக:
a)$Caso_4 2H_2O$ - ஜிப்சம்
b)$Mgso_4 7H_2O$ - எப்சம்
c)$Caso_4$ ½ $H_2O$ - பாரிஸ்சாந்து
d)$C_6H_5OH$ - கார்பாலிக் அமிலம்
1)1,2,3,4 2)3,2,1,4 3)1,3,2,4 4)3,1,2,4

105)பொருத்துக:

| பாதுகாப்புத்திட்டம் | - | ஆண்டு |
|---|---|---|
| 1)யானை | - | 1999 |
| 2)ஆமை | - | 1972 |
| 3)புலி | - | 2020 |
| 4)காண்டாமிருகம் | - | 1992 |
| 5)முதலை | - | 1976 |

1)4,1,2,3,5 2)4,1,3,2,5 3)1,3,5,4,2 4)1,2,3,4,5

106)கச்சா எண்ணெய் பயன்படுத்துவதில் சரியான வரிசை எது?
1)சீனா, அமெரிக்கா, ஜப்பான்
2)அமெரிக்கா, இந்தியா, சீனா
3)இந்தியா, சீனா, ஜப்பான்
4)அமெரிக்கா, சீனா, இந்தியா

107)கூற்று:1 2-ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கல்லணை உலகில் 4.வது பழமையான அணையாகும்
கூற்று:2 2-ம் மிகப்பெரிய காற்றாலை ஹவாய்-யில் உள்ளது.
1)1,2 சரி 2)1,2 தவறு 3)2 சரி 4)1 சரி

108)சூரிய ஒளியைப் பயன்படுத்தி செயற்கை ஒளிர்ச்சேர்க்கை நிகழ்ச்சி நடத்தியவர்யார்?
1)C.N.R.ராவ் 2)M.கால்வின்
3)S.R.போஸ் 4)S.J.கார்சல்

109)பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1)போரா | - | ஐரோப்பா |
| 2)லூ | - | ஆப்பிரிக்கா |
| 3)சின்னூக் | - | வடஅமெரிக்கா |
| 4).ஃபான் | - | இந்தியா |
| 5)சிராக்கோ | - | இத்தாலி |

1)1,2,3,4,5 2)5,4,3,2,1 3)5,3,4,1,2 4)5,4,3,1,2

110)'போரா குகைகள்' எங்கு காணப்படுகிறது
1)சத்தீஸ்கர் 2)ஆந்திரா
3)மேற்கு பிகார் 4)உத்தரகாண்ட்

111)"The Search For the India's Lost Emperor" – ஆசிரியர்
1)வில்லியம் ஜோன்ஸ் 2)பிரின்செஸ்
3)சார்லஸ் ஆலன் 4)கன்னிங்காம்

112)உலகின் மிக ஆழமான பகுதி எங்கு உள்ளது.
1)ஜப்பான் 2)இரஷ்யா
3)பின்லாந்து 4)ஆஸ்திரேலியா

113)'பச்பன் பச்சாவ் அந்தோலன்' - என்னும் இயக்கத்தை தொடங்கியவர்
1)மலாலா யூசப் 2)கைலாஷ் சத்தியார்த்தி
3)அருணாராய் 4)நிக்கில் தேவ்

114)கீழ்க்கண்டவற்றுள் பொருத்தமற்றது எது?
1)வெளியுறவுத்துறைகள் 2)மக்கள் தொகை கட்டுப்பாடு
3)தபால் மற்றும் தந்தி 4)ஆயுதப் படைகள்

115)எந்த ஆண்டு உலகளாவிய நகர்புற ம.தொகை ஊரக ம.தொகை விட அதிகமானது
1)2005 2)2007 3)2010 4)2012

116)பாலிபேஜியா என்ற நிலை ....... காணப்படுகிறது
1)உடற்பருமன் 2)டயாபடீஸ் மெல்லிடஸ்
3)டயாபடீஸ் இன்சிபிடஸ் 4)எய்ட்ஸ்

117)இந்தியாவின் முதல் சேசிய பூங்கா எங்கு - எப்போது தொடங்கப்பட்டது?
1)உ.பி-1948 2)உத்தரகாண்ட்-1986
3)டெல்லி-1952 4)ம.பி-1973

118)ஆளுநர்க்கான சிறப்புரிமைகள் வழங்கும் சரத்து விதி?
1)361(1) 2)348 3)268 4)72

119)சூரிய குடும்பத்தில் கோளின் எதிர்திசையில் சுற்றும் ஒரேநிலவு?
1)கனிமீடு 2)டிரைட்டான் 3)டைட்டன் 4)எதுவும் இல்லை

120)அடிப்படை கல்வித்திட்டமான காந்தியின் வர்தா கல்வித்திட்டம்' உருவான ஆண்டு?
1)1918 2)1927 3)1942 4)1931

121)புவியில் பதிவான மிக அதிகபட்ச வெப்பநிலை?
1)134°F 2)128°F 3)110°F 4)140°F

122)'Monument' என்பதன் பொருள்?
1)வரலாற்றாசிரியர் 2)நினைவு சின்னம்
3)முன்னோர்கள் 4)கல்வெட்டு

123)(INC) - இந்திய தேசிய காங்கிரஸ் முதல் கூட்டத்தில் கலந்து கொண்ட முஸ்லீம்களின் எண்ணிக்கை?
1)72 2)15 3)8 4)2

124)சென்னை உதயவனத்தில் சத்யாகிரக முகாமை அமைத்தவர் யார்?
1)K.காமராஜ் 2)C.இராஜாஜி 3)T.பிரகாசம் 4)K.சந்தானம்

125)தமிழ்நாடு உருவான காலத்தில் எத்தனை மாவட்டங்கள் இருந்தன?
1)13 2)15 3)14 4)10

126)ஊராட்சிகளின் ஆய்வாளராகச் செயல்படுவர்.........
1)ஆணையர் 2)பகுதி உறுப்பினர்
3)மாவட்ட ஆட்சியர் 4)மாநகரத் தலைவர்

127)ஜாகீர்தாரி, மல்குஜாரி என்று அழைக்கப்பட்ட நிலவரிமுறை எது?
1)மகல்வாரி முறை 2)இரயத்துவாரி முறை
3)ஜமீன் தாரிமுறை 4)இவற்றில் எதுவுமில்லை

128)'திருச்சி பிரகடனம்' வெளியிடப்பட்ட ஆண்டு?
1)1802 2)1806 3)1801 4)1808

129)1995-உலகம் முழுவதிலும் இருந்து பெண்கள் .......... கூடினர்
1)பெய்ஜிங் 2)நியூயார்க் 3)சிங்கப்பூர் 4)மலேசியா

130)பொருத்துக:
அ)ஏழைப்பெண்கள் திருமண உதவித்திட்டம் - அன்னை தெரசா
ஆ)விதவை மறுமணத் திட்டம் - முத்துலட்சுமிஅம்மையார்
இ)ஆதரவற்ற பெண்களுக்கான திருமண உதவித்திட்டம் - தர்மாம்பாள் அம்மையார்
ஈ)ஜாதி மறுப்புத் திட்டம் திருமண உதவித்திட்டம் - மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்
1)4,3,1,2 2)2,1,3,4 3)1,2,4,3 4)3,4,2,1

131)சரியான இணை எது?
1)மதிய உணவுத் திட்டம் - ஜெ.ஜெயலலிதா
2)தொட்டில் குழந்தை திட்டம் - ஜானகி ராமச்சந்திரன்
3)சமத்துவபுரம் - கு.காமராஜ்
4)சத்துணவுத் திட்டம் - ம.கோ.ராமச்சந்திரன்

132)பொருத்துக:
அ)TNeGA - 1)ஸ்டேட் நோபல் ஏஜென்சி
ஆ)இ-சேவை - 2)நிகழ்நிலைச் சேவைகள்
இ) TN-GIS - 3)தொலையுணர்வு தொழில்நுட்பம்
ஈ)Block Chain Back Bone - 4)நம்பிக்கை இணையம்
1)1,2,3,4 2)2,1,3,4 3)1,2,4,3 4)4,3,2,1

133)2021-ம் ஆண்டிற்கான 24வது-National Conference on E-Governance (24-வது தேசிய மின் ஆளுகை மாநாடு) எங்கு நடைபெற்றது?
1)மும்பை 2)ஹைதிராபாத் 3)சென்னை 4)மைசூரு

134)கீழ்கண்டவற்றுள் அரசுக்கும் அதன் ஊழியர்களுக்குமான மின் -ஆளுகை வகை எது?
1)G2G 2)G2C 3)G2B 4)G2E

135)தமிழ்நாட்டில் அரசு இ-சேவை மையங்களை உருவாக்கியுள்ள அமைப்பு எது?
1)TACTV 2)ELCOT 3)TAMILNILAM 4)STAR 2.0

136)NIC (National Informatics Centre) தலைமையிடம் எங்குள்ளது?
1)சென்னை 2)பூனே
3)ஹைதிராபாத் 4)கொல்கத்தா

137)Information Act வெளியான ஆண்டு எது?
1)1997 2)1998 3)1999 4)2000

138)'தென்னிந்திய நல உரிமைக் கழகம்' தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு எது?
1)1914 2)1915 3)1916 4)1917

139)நீதிக்கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலம் எது?
1)1917–1937 2)1919-1939 3)1920-1937 4)1920-1939

140)பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்ட ஆண்டு எது?
1)1919 2)1920 3)1921 4)1922

141)'தாய்' திட்டத்துடன் தொடர்புடைய அரசு எது?
1)AIADMK 2)DMK
3)JUSTICE PARTY 4)JANATHA PARTY

142)திமுக அரசின் திட்டங்களுள் தவறானது எது?
1)தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்யப்பட்டது
2)டாக்டர் பி.வி.ராஜமன்னார் குழு அமைக்கப்பட்டது
3)உலகத் தமிழ் செம்மொழி மாநாடு கோவையில்

SHANTHI IAS ACADEMY

நடத்தப்பட்டது
4)லாட்டரி சீட்டுகள் தடை செய்யப்பட்டன

143)எட்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற இடம் எது?
1)சென்னை 2)தஞ்சை 3)மதுரை 4)கோவை

144)கிராம ஊழிய முறை ஒழிக்கப்பட்டு 'கிராம நிர்வாக அதிகாரிகள் முறையினை கொண்டு வந்தவர்?
1)MGR 2)அண்ணா 3)கலைஞர் மு.கருணாநிதி
4)ஜானகி ராமச்சந்திரன்

145)அண்ணாதுரை 'தி.மு.க'-வை உருவாக்கிய ஆண்டு?
1)1947 2)1948 3)1949 4)1950

146)K-plan திட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு?
1)1960 2)1961 3)1962 4)1963

147)இலவச மதிய உணவு திட்டம் தொடங்கி வைக்கப்பட்ட இடம் எது?
1)கோவை 2)மதுரை 3)எட்டையபுரம்
4)பாளையங்கோட்டை

148)சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்தவர் யார்?
1)அறிஞர் அண்ணா 2)ஈ.வே.ரா 3)சுப்புராயலூ
4)முனுசாமிநாயுடு

149)நீதிக் கட்சியின் திட்டங்களுள் தவறானது எது?
1)பணியாளர் தேர்வு வாரியம்
2)இனவாரி ஒதுக்கீட்டு அரசாணை
3)பெண்களுக்கான வாக்குரிமை
4)ஜமீன்தாரி முறை ஒழிப்பு

150)'குலக்கல்வி' முறை கொண்டு வரப்பட்ட போது தமிழகமுதல்வர் யார்?
1)காமராஜர் 2)இராஜாஜி
3)டி.பிரகாசம் 4)ஓமந்தூர் ராமசாமிரெட்டியார்

151)1999-ல் தமிழகத்தின் முதல் 'உழவர் சந்தை' எங்கு தொடங்கப்பட்டது?
1)தென்காசி 2)நாகர்கோவில் 3)மதுரை 4)திருச்சி

152)மதுரையில் 5வது உலகத்தமிழ் மாநாடு நடைபெற்ற போது தமிழக பொறுப்பில் இருந்த கட்சி எது?
1)தி.மு.க 2)காங்கிரஸ் 3)அஇஅதிமுக 4)நீதிக்கட்சி

153)பின்வருவனவற்றுள் 'தாய்' திட்டத்துடன் தொடர்புடையது எது?
1)தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டு திட்டம்
2)முதலமைச்சரின் சூரிய சக்தி கொண்ட பசுமை இல்லத் திட்டம்
3)மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்
4)தமிழ்நாடு ஒருங்கிணைக்க சத்துணவுத் திட்டம்

154)அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்ட ஆண்டு?
1)1929 2)1931 3)1933 4)1939

155)"பார்படுப செம்பொன் பதிபடுப.......''என தொடங்கும் நூல்?
1)மலைபடுகடாம் 2)தகடூ யாத்திரை
3)முத்தொள்ளாயிரம் 4)பட்டினப்பாலை

156)தகடூர் உள்ள மாவட்டம்.........
1)தருமபுரி 2)சேலம் 3)ஈரோடு 4)நாமக்கல்

157)பத்துப்பாட்டையும் எழுதிய புலவர்களின் எண்ணிக்கை......
1)5 2)6 3)7 4)8

158)"நீரினின்றும் நிலத்து ஏற்றவும் நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்.... பாடல் இடம்பெற்ற நூல்?
1)பட்டினப்பாலை 2)குறிஞ்சிப்பாட்டு
3)நெடுநல்வாடை 4)மதுரைக்காஞ்சி

159)கோழி அறத்தோடு நிற்றல் என்ற துறையில் அமைந்த நூல்?
1)பட்டினப்பாலை 2)குறிஞ்சிப்பாட்டு
3)நெடுநல்வாடை 4)மதுரைக்காஞ்சி

160)திருமுருகாற்றுப்படையைப் பாடியவர் யார்?
1)குறிஞ்சிப்பாட்டு பாடியவர் 2)நெடுநல்வாடை பாடியவர்
3)பட்டினப்பாலையை பாடியவர் 4)1 & 2

161)பௌத்தப்பள்ளி, அமண்பள்ளி பற்றி கூறும் நூல்?
1)மதுரைக்காஞ்சி 2)முல்லைப்பாட்டு
3)பெரும்பாணாற்றுப்படை 4)நெடுநல்வாடை

162)முல்லைப்பாட்டு பாடல்களின் எண்ணிக்கை?
1)782 2)188 3)500 4)103

163)திருவெ.'.பா என்பது..........
1)தஞ்சை 2)காஞ்சி 3)மதுரை 4)திண்டிவனம்

164)காரி என்பவனுடன் போர் செய்தவன் யார்?
1)ஓரி 2)பேகன் 3)ஆய் 4)அதியமான்

165)பொருநராற்றுப்படையில் பாட்டுடையத் தலைவன்?
1)நல்லியக் கோடன் 2)தொண்டைமான் இளந்திரையன்
3)கரிகால் பெருவளத்தான் 4)முடத்தாமக் கண்ணியார்

166)ஆற்றுப்படை நூல்களுள் சிறியது கொண்ட பாடல் அடி.....
1)248 2)583 3)242 4)103

167)பத்துப்பாட்டில் பெரிய நூல் கொண்ட பாடல் அடிகள்?
1)781 2)782 3)788 4)786

168)பத்துப்பாட்டு, திருமுறைகள் இடம்பெற்ற ஒரே நூல்?
1)சிறுபாணாற்றுப்படை 2)பெரும்பாணாற்றுப்படை
3)பொருநராற்றுப்படை 4)திருமுருகாற்றுப்படை

169)ஆற்றுப்படை என்று பெயர் பெற்ற நூல்கள்?
1)4 2)5 3)6 4)3

170)இல்லை என்று இரப்போர்க்கு இல்லை என்று கூறும் வறுமை அடைவேனாக-என்று சூளுரைத்த மன்னன் யார்?
1)பாண்டியன் நெடுஞ்செழியன் 2)பூதப்பாண்டியன்
3)சோழன் நலங்கிள்ளி 4)பாண்டியன் முடத்திருமாறன்

171) குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனிடம் நில வரியை நீக்கப் பாடியவர் யார்?
1)பிசிராந்தையார் 2)நலங்கிள்ளி
3)ஔவையார் 4)வெள்ளைக்குடிநாகனார்

172) "தாயோடு அறுசுவைபோம் தந்தையோடு கல்விபோம்" என்று ஔவையார் எந்த நூலில் பாடியுள்ளார்?
1)தனிப்பாடல் திரட்டு 2)ஆத்திச்சூடி
3)முதுரை 4)கொன்றைவேந்தன்

173) பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்தில் கடற்பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பாடி உம்பற்காட்டு வருவாயையும் அவன் மகன் குட்டுவன் சேரலையும் பரிசாகப் பெற்றவர் யார்?
1)பொன்முடியார் 2)பரணர்
3)ஔவையார் 4)பிற்கால ஔவையார்

174) நாகம் கொடுத்த ஆடையை சிவனுக்குக் கொடுத்தவன்?
1)பாரி 2)காரி 3)பேகன் 4)ஆய்

SHANTHI IAS ACADEMY

175) சோறும் நீரும் ஒரு மருந்து என்றுபாடியவர் யார்?
1)ஔவையார் 2)நெடுங்கிள்ளி
3)கோவூர்கிழார் 4)பொன்முடியார்

176) கபிலரை 'புலன் அழுக்கற்ற அந்தணாளன்' என்று பாடியவர் யார்?
1)நப்பசலையார் 2)நக்கீரர் 3)இளங்கீரனார்
4)பெருங்குன்றூர்கிழார்

177) பொருத்துக.
1)கபிலர் - 235 2)அம்முவனார் - 127
3)ஓரம்போகியார் - 110 4)ஓதலாந்தையார் - 107
5)பேயனார் - 105
1)5,4,3,2,1 2)4,5,2,1,3 3)1,2,3,4,5 4)1,2,3,5,4

178) "அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" என பாடியவர் யார்?
1)கோவூர்கிழார் 2)மதுரை இளநாகனார்
3)இடைக்குன்றூர்க்கிழார் 4)கோப்பெருஞ்சோழன்

179) பெரும்போரில் இருபெரு வேந்தரும் சூடும் பூ எது?
1)நொச்சிப்பூ 2)உழிஞைப்பூ
3)தும்பைப்பூ 4)காஞ்சிப்பூ

180) நற்றிணைக் கடவுள் வாழ்த்துப்பாடல் எந்த கடவுளை பற்றி குறிப்பிடுகிறது?
1)முருகன் 2)திருமால் 3)இந்திரன் 4)வருணன்

181) அவ்வை என்றால்………… என்று பொருள்?
1)உம் அக்காள் 2)உன்தாய்
3)எம்அக்காள் 4)அவர்கள் அக்காள்

182) ஐங்குறுநூற்றை தொகுத்தவர் யார்?
1)மாந்தரஞ்சேரல் இரும்பொறை 2)பாரதம் பாடிய பெருந்தேவனார் 3)கூடலூர்க்கிழார் 4)உ.வே.சா

183) பதிற்றுப்பத்தில் 6-ம் பத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?
1)செல்வக் கடுங்கோ வாழியாதன்
2)கடற்பிறக் கோட்டிய செங்குட்டுவன்
3)தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை
4)ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

184) பரிபாடலைப் பாடிய புலவர்கள் எத்தனை பேர்?
1)22 2)8 3)13 4)18

185) பெருந்திணைப்பாடல்கள் இடம்பெற்ற ஒரே சங்கநூல் எது?
1)நற்றிணை 2)பட்டினப்பாலை
3)கலித்தொகை 4)பரிபாடல்

186) Aஎன்பவர் Bயின் சகோதரி. Cஎன்பவர் Bயின் மகன். Dஎன்பவர் Cயின் மகள் எனில் Dஎன்பவர் Aயின்
1)பேத்தி 2)பேரன் 3)தாய் 4)தந்தை

187) 1/35 ஆனது 2/7-ல் எத்தனை சதவீதம்?
1)25% 2)2.5% 3)10% 4)1000%

188)2,6,18,54…..என்ற வரிசையின் 8வது உறுப்பு
1)4370 2)4374 3)7442 4)7434

189)ஒரு பகடையை ஒருமுறை எறியும்போது கிடைக்கும் எண் 3ன் மடங்காக இருப்பதற்கான நிகழ்தகவு என்ன?
1)½ 2)1/3 3)1/6 4)2/3

190)நன்கு கலைத்து வைக்கப்பட்ட 52 சீட்டுகள் கொண்ட சீட்டுக் கட்டிலிருந்து ராண்டம் முறையில் ஒரு சீட்டு எடுக்கப்படுகிறது. அது டயமண்ட் அல்லது ராஜா சீட்டாக இருக்க நிகழ்தகவு
1)4/13 2)5/13 3)6/13 4)9/13

191) ஒரு பையில் 1ரூபாய், 50பைசா மற்றும் 25பைசா நாணயங்கள் முறையே 5:6:7 என்ற விகிதத்தில் உள்ளன. அந்த பையில் மொத்தம் 390ரூபாய் இருந்தால், ஒவ்வொரு நாணயமும் எந்த எண்ணிக்கையில் இருக்கும்?
1)200,280,240 2)240,200,280 3)200,240,280 4)280,240,200

192)$(1000)^9 \div 10^{24}$ன் மதிப்பு காண்க.
1)10,000 2)1,000 3)100 4)10

193)9மீ ஆரமுள்ள ஒரு வட்டத்திலிருந்து $140^o$மையக்கோணம் கொண்ட ஒரு வட்டகோணப்பகுதியை வெட்டியெடுத்து அதன் ஆரங்களை ஒன்றிணைத்து ஒரு கூம்பாக்கினால், கிடைக்கும் கூம்பின் வளைபரப்பு காண்க.
1)99மீ $^2$ 2)254.57மீ $^2$ 3)22மீ $^2$ 4)126மீ $^2$

194)$2^3 x 3^2 x 5 x 7^4$, $2^2 x 3^5 x 5^2 x 7^6$, $2^3 x 5^3 x 7^2$ இவற்றின் மீ.பொ.வ காண்க
1)980 2)870 3)960 4)840

195)பொருந்தாத எண்ணை கண்டுபிடி 5,2,13,29,17,8,23
1)2 2)29 3)8 4)13

196)A,B,C ஆகிய மூவர்களின் மாதச்சம்பளம் 2:3:5 ஆகும் C-ன் மாதச் சம்பளம் Aஐ காட்டிலும் ரூ.1200 அதிகம் எனில் B-ன் ஆண்டு சம்பளம் என்ன?
1)14,400 2)24,000 3)1,200 4)2,000

197)இடைநிலை காண்க :
28,7,15,3,14,18,46,59,1,2,9,21
1)18.5 2)46.5 3)28.5 4)14.5

198)காயத்ரி என்பவர் ரூ.12,000ஐ 5% ஆண்டு கூட்டுவட்டி தரும் ஒரு வங்கியில் 'n' ஆண்டுகளுக்கு முதலீடு செய்தார். அவர் முடிவில் தொகை ரூ.13,230 பெற்றார் எனில் n மதிப்பு காண்க.
1)2 2)3 3)1½ 4)2½

199)இரு எண்களின் கூடுதல் 24 மற்றும் பெருக்கல் 143 எனில், அவ்விரு எண்களின் வர்க்கங்களின் கூடுதல் காண்க.
1)296 2)295 3)290 4)228

200)A,B,C என்ற மூன்று பேர் ஒரு வேலையை முறையே 36,54,72 நாட்களில் முடிப்பர். இதில் A என்பவர் வேலை முடிவதற்கு 8 நாட்களுக்கு முன்பாகவும், B என்பவர் 12 நாட்களுக்கு முன்பாகவும் விலகிக் கொண்டனர் C என்பவர் அவ்வேலையை எத்தனை நாட்களில் முடிப்பார்?
1)24 2)26 3)28 4)30

SHANTHI IAS ACADEMY